# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075854

C

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 6/2022 Date: நாள் 25.08.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.08.2022 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.08.2022 Time : நேரம் 1500 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III Time : நேரம் 1500 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், கொத்தட்டை
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தி. அன்பழகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தில்லை கோவிந்தன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 58 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாய வேலை (g) Address : முகவரி 426,வடக்கு தெரு, தோப்பிருப்பு பரங்கிப்பேட்டை அஞ்சல், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

பார்த்தசாரதி, கிராம நிர்வாக அலுவலர், கொத்தட்டை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் **24.08.2022** ஆம் தேதி மாலை **15.00** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், புவனகிரி தாலுக்கா, பரங்கிப்பேட்டை அஞ்சல், தோப்பிருப்பு கிராமம், நெ.**426**, வடக்குத் தெருவைச் சேர்ந்த தில்லை கோவிந்தன் மகன் தி.அன்பழகன் என்பவர், எழுத்து மூலமான புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புனர், தி.அன்பழகன், **58**, த/பெ தில்லை கோவிந்தன், **426**, வடக்கு தெரு, தோப்பிருப்பு, பரங்கிப்பேட்டை அஞ்சல், புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம். பெறுதல், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். எங்கள்

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .......................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் P. அன்பழகன், காவல் ஆய்வாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
T. அன்பழகன்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 25/8/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25-8-2022 at 09.30

Name பெயர் அ. திருவேங்கடம்
Rank நிலை .................... No எண் ..........
காவல் ஆய்வாளர்,
ல.ஒ.த.க பிரிவு, கடலூர்.

எங்கள் குடும்ப சொத்தை, நானும், எனது உடன் பிறந்த தம்பி கண்ணன் பாகபிரிவினை செய்து கொண்டோம். இந்த பாகபிரிவினையை புதுச்சத்திரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 26.01.2022 அன்று ஆவண.எண்.55/2022 ஆக பதிவு செய்து கொண்டோம். இந்த பாகபிரிவினை மூலம் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்களை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு 27.06.2022 ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். நான் ஆன்லைன் விண்ணப்பம் செய்து இரண்டு மாதம் ஆகியும், எனது பெயரில் பட்டா மாற்றம் ஆகாமல் இருந்தது. இதனால் 22.08.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணிக்கு கொத்தட்டை கிராம நிர்வாக அலுவலகம் சென்று, அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் பார்த்தசாரதி என்பவரிடம் நான் ஆன்லைனில் விண்ணப்பத்திற்கான ஒப்புகை சீட்டை காட்டி என்னுடைய பட்டா மாற்றம் சம்மந்தமாக கேட்டேன். அதனை வாங்கி பார்த்த கிராம நிர்வாக அலுவலர், என்னிடம் உன் பட்டா மாற்றம் வேலையினை நான் தான் செய்து கொடுக்கனும், அதற்க்கு தனியா எனக்கு ரூ.10,000/– பணம் கொடுக்கனும் என சொன்னார். நான் அவரிடம், ஆன்லைனில் விண்ணப்பம் செய்யும்போதே பட்டா மாற்ற பணம் கட்டிவிட்டேன், அவர் கேட்ட ரூ.10,000/– பணத்தையும் ஆன்லைனில் கட்ட வேண்டுமா என அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இந்த ரூ.10,000/– பணம் தனியா தனியா தரனும், ஆன்லைனில் கட்ட கூடாது, பணமா கொண்டு வந்து அவரிடம் கொடுக்க வேண்டும் என கூறினார். அதற்கு நான் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் என சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் யோசித்து பார்த்ததில், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் எனக்கு பட்டா மாற்றி கொடுக்க லஞ்சமாக ரூ.10,000/– கேட்கிறார் என தெரிந்து கொண்டேன். கிராம நிர்வாக அலுவலர் கேட்ட ரூ.10,000/– லஞ்ச பணத்தை கொடுத்து பட்டா மாற்றம் செய்து கொள்ள விருப்பமில்லை. இதனால் அவர் மீது புகார் கொடுக்க முடிவு செய்தேன். எனக்கு பட்டா மாற்றம் செய்து கொடுக்க ரூ.10,000/– லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் பார்த்தசாரதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று 24.08.2022 தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். கிராம நிர்வாக அலுவலர் பார்த்தசாரதி என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூ.10,000/–ம் நான் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம் T.அன்பழகன்),

ஐயா, மேற்படி வாதியின் புகார் மனுவை நான் 24.08.2022 ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு பெற்றேன். மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டின் உண்மை தன்மை பற்றி விசாரித்ததில் குற்றச்சாட்டு உண்மையென தெரியவருகிறது. வாதியின்

அ. [signature] 25/8/22

புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பதினால், மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உத்திரவுபடி நான் இன்று **25.08.2022** ஆம் தேதி காலை **08.30** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2022, U/s 7 Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் உத்திரவுபடி வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P.அன்பழகன் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து மேண்மைமிகு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

25/8/22
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு கடலூர்.